


**18. 09. 2025**

## தலைப்பு செய்திகள்

1. நேபாளத்தில் அமைதி திரும்ப இந்தியா ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தொழிற்பயிற்சி நிறுவனங்களின் தரத்தை உயர்த்த தேவையான நிதி உதவி வழங்கப்படும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. ராமேஸ்வரம் முதல் - இலங்கை தலைமன்னார் வரை விரைவில் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அறிவித்துள்ளார்.

4. திருச்சி, சேலம், தர்மபுரி, திருப்பத்தூர் வேலூர் விழுப்புரம் செங்கல்பட்டு உள்ளிட்ட 21 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

## இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர்

நேபாளத்தில் அமைதி திரும்ப இந்தியா ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் இடைக்கால பிரதமர் சுஷீலா கார்கியுடன் தொலைபேசி மூலம் உரையாடிய பிரதமர், அந்நாட்டில் ஸ்திர தன்மையை நிலைநாட்ட இந்தியா தேவையான உதவிகளை வழங்கும் என்றும் கூறியுள்ளார்.

நேபாள தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*************

.. மியூசிக் ..

சேவை, நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கும், வளர்ச்சிக்கும் அர்பணிப்புடன் அயராது செயலாற்றி வரும் நிலையில், வேளாண் துறையில் கொண்டுவரப்பட்டுள்ள மாபெரும் மாற்றங்கள் மற்றும் விவசாயிகளின் ஆளுமை குறித்து சிறப்பு தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

சுதந்திரத்தின் நூற்றாண்டு காலத்தை நோக்கி நாம் பயணிக்கும் இத்தருணத்தில் வேளாண் துறையில் தற்சார்பை எட்டவும் உணவு உற்பத்தியில் முன்னோடி நாடாகவும் நம் தேசம் உருவெடுப்பதற்கான பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த 11 ஆண்டுகளில் வேளாண்மைக்கான நிதி ஒதுக்கீடு 22 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கப்பட்டு ஒரு லட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு.நரேந்திரமோடி டெல்லி செங்கோட்டையில் தமது சுதந்திர உரையின்போது மத்திய அரசின் மிகப்பெரிய முன்னுரிமை, விவசாயிகளே என்றும், அவர்களது நலன்களில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்றும் உறுதிபட தெரிவித்திருந்தார்.

...பிரதமர் வாய்ஸ்...

கரீ்.ப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிக்கப்பட்டதோடு,

பிரதமரின் வேளாண் நிதி உதவி திட்டத்தின் மூலம் 3 லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாய் விநியோகிக்கப்பட்டுள்ளது.

சிறு நடுத்தர விவசாயிகள், பிரதமரின் ஓய்வூதிய திட்டத்தின் மூலம், மாதந்தோறும் மூவாயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெறும் வகையில் 25 லட்சம் விவசாயிகள் பதிவு செய்துள்ள நிலையில், வேளாண் அட்டைகள் மூலம் விவசாயிகளுக்கு 10 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம், பண்ணை உற்பத்தி மேம்பாட்டு திட்டம், வேளாண் கட்டமைப்பு நிதியம், உரம் உள்ளிட்ட இடுபொருட்களுக்கான ஒருங்கிணைந்த விவசாய மையம், தேசிய வேளாண் மின்னணு சந்தை போன்ற உத்வேகமிகு திட்டங்கள் மூலம் விவசாயிகளின் நலன்களையும், உணவு பாதுகாப்பையும் பிரதமர் தலைமையிலான மத்திய அரசு உறுதி செய்து வருகிறது..

.. மியூசிக் ..

*************

**நிர்மலா சீதாராமன்**

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களை செயற்கை நுண்ணறிவு திறனுடன், தரம் உயர்த்த, தேவையான நிதி உதவியை, மத்திய அரசு வழங்கும் என்று, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தர மேலாண்மை தொடர்பான வருடாந்திர கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், தொழிற்சாலைகளின் தேவைக்கு ஏற்ப, தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தரம் உயர்த்தப்படுவதாக கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக, திறன் வளர்ச்சி மற்றும் படைப்பாற்றல் திறனுக்கு தேவையான நிதியை, மத்திய அரசு பட்ஜெட்டில் ஒதுக்கிவருவதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக இளைஞர்கள் திறன்பயிற்சிகளை பெற ஊக்கத்தொகையுடன் கூடிய திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக அவர் கூறினார்.

இளையோர் திறன்களை மேம்படுத்த தொழிற்சாலைகள் அரசுடன் இணைந்து செயலாற்ற அமைச்சர் வலியுறுத்தினார்.

செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மேம்பாடு பயிற்சிகள் வழங்க, இந்திய தொழில்நுட்ப கல்வி கழகங்கள் போன்ற, அறிவுசார் நிறுவனங்களை மத்திய அரசு அடையாளம் கண்டுள்ளதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

வேளாண்மை, கல்வி, சுகாதாரம், நகர்புற வாழ்க்கைமுறை என்ற நான்கு அம்சங்களில் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

*************

**இஸ்ரோ நாராயணன்**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ, வரும் டிசம்பர் மாதம் இறுதியில், ஆளில்லா விண் ஊர்தியில் வயோமித்ரா என்ற இயந்திர மனிதரை அனுப்ப திட்டமிட்டுள்ளதாக இதன் தலைவர் திரு.நாராயணன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தொடர்ந்து விண்ணிற்கு இரண்டு ராக்கெட் செலுத்தப்படும் என்றார்.

ககன்யான் திட்டத்தில் 85 சதவிகித சோதனைகள் நிறைவு பெற்றுள்ளதாகவும், மனிதர்களை அனுப்புவதற்கான சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

சந்திரயான் 4 விண்வெளி திட்டத்தின் கீழ் நிலவின் மாதிரிகளை கொண்டுவர செயற்கை நுண்ணறிவு ரோபோ தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என்றார்.

நாட்டில் உள்ள மாணவ மாணவிகள் விண்வெளி சார்ந்த தொழில்நுட்பங்களில் ஆர்வமாக உள்ளதை அவர் பாராட்டினார்.

*************

## ஆனந்த் நாகேஸ்வரன்

நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த 6 ஆண்டுகளில் சாதனை அளவாக மேம்பட்டதாக மத்திய நிதித்துறையின் முதன்மை பொருளாதார ஆலோசகர் டாக்டர் வி.ஆனந்த் நாகேஸ்வரன் கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் இந்திய வர்த்தக தொழிற்கூட்டமைப்பின் 125ஆவது நிறுவனநாளை ஒட்டி இன்று உரையாற்றிய அவர், 2027-28 ஆம் நிதியாண்டில் பொருளாதாரம் 5 லட்சம் கோடி டாலராக இருக்கும் என்று சர்வதேச நிதியம் கணித்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

நடப்பு நிதியாண்டின், முதல்காலாண்டில் காணப்பட்ட அதே உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி விகிதம், அடுத்த காலாண்டிலும் இருக்கும் என்று குறிப்பிட்டார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், கடந்த 6 ஆண்டுகளில், உயர் வளர்ச்சியை எட்டியதாகவும், உள்நாட்டு உற்பத்தியில், வேளாண்மையின் பங்கு, ஆக்கப்பூர்வமாக உள்ளதாகவும், அவர் எடுத்துரைத்தார்.

அதேவேளையில் உற்பத்தி சார்ந்த பிரிவின் பங்களிப்பு சற்று குறைவாகவே இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

*************

## சரக்கு சேவை வரி

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அறிவிப்பிற்கு ஏற்ப அடுத்த தலைமுறையினருக்கான சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் வரும் 22-ம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் நிலையில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பல்வேறு பொருட்களின் வரி விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவிப்பின்படி சுற்றுச்சூழலுக்கு உகந்த சாமானிய மக்கள் பயன்படுத்தும் சைக்கிள் மற்றும் வேளாண்மைக்கான டிராக்டருக்கான வரி 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திண்டுக்கல்லை சேர்ந்த பயனாளி ஒருவர் தெரிவிக்கையில்

**வாய்ஸ்**

**************

**உதயநிதி**

தமிழ்நாட்டில் மக்கள் நல திட்டம் சார்ந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை துரைப்பாக்கத்தில் இம்முகாமை இன்று நேரில் ஆய்வு செய்த அவர் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

**************

**எ.வ.வேலு**

ராமேஸ்வரம் முதல் இலங்கை தலைமன்னார் வரை விரைவில் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பூந்தமல்லி, எண்ணூர் துறைமுகம் வரையிலான பாலப்பணிகள் நிறைவடையும் பட்சத்தில் துறைமுகத்திற்கு நேரடியாக பொருட்களை கொண்டு செல்ல முடியம் என்றார்.

**************

**கீதாஜீவன்**

தமிழ்நாட்டில் மாணாக்கர் போதை பழக்கத்திற்கு அடிமையாகிவிடக்கூடாது என்பதில் மாநில அரசு தனி கவனம் செலுத்தி வருவதாக மாநில சமூக

நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் போதையில்லா தமிழ்நாடு என்ற தலைப்பிலான நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், மாணாக்கருக்கு கல்வி கற்பதில் இருக்கும் தடைகளை போக்கும் வகையில் போதையில்லா தமிழ்நாடு எனும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

**************

எடப்பாடி

தமிழ்நாட்டில் வரும் சட்டமன்ற தேர்தலில் அஇஅதிமுக வெற்றிபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி உறுதிபட தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலனுக்கு எதிராக செயல்படும் திமுக அரசை நீக்க வேண்டும் என்று மக்கள் விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் தமது டெல்லி பயணத்தின்போது உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷாவை சந்தித்து தேச நலனிற்காக பாடுபட்டவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாக குறிப்பிட்டார்.

கட்சியின் கட்டுப்பாட்டை மீறி செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

**************

நீதிமன்றம்

தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக 12 வாரங்களில் பரிசீலிக்க கல்வி துறை செயலாளருக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கை இன்று விசாரித்த நீதிமன்றம் பள்ளிகளை தரம் உயர்த்துவது தொடர்பாக உரிய உத்தரவுகளை பிறப்பிக்கவும் ஆணையிட்டுள்ளது.

*************

இருவரி

**தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து** மாநில வணிகவரி பதிவுதுறை அமைச்சர் திரு.மூர்த்தி பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறந்துவைத்தார்.

120 நாட்களுக்கு திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் மதுரை திண்டுக்கல் சிவகங்கை மாவட்டங்களின் ஒருலட்சத்து ஐந்தாயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக** இருக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால் பயிர்களை தேர்வு செய்து பயிரிட வேண்டும் என ஆட்சித்தலைவர் திரு.இளம் பகவத் இன்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வரும் தீபாவளி** பண்டிகையை ஒட்டி கோ-ஆப்டெக்ஸ் சிறப்பு தள்ளுபடி விற்பனை இன்று தொடங்கியது.

நடப்பாண்டு ஒருகோடியே 78 லட்ச ரூபாய் விற்பனைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்** மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆட்சித்தலைவர் திரு.சரவணன் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று ஆய்வு செய்தார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பு மருத்துவ** முகாம் நாளை மறுநாள் நடைபெறும்.

**சிவகங்கை மாவட்டத்தில் தாட்கோ மூலம்** செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள் வாயிலாக மானியத்துடன் கூடிய கடனுதவி பெற ஆதி திராவிடர் பழங்குடியினர் இசேவை மையம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தனியார் துறை வேலை** வாய்ப்பு முகாம் நாளை நடைபெறும்.

**மயிலாடுதுறையில் குறுவை அறுவடை பணிகள்** நடைபெறுவதால் வேளாண் பொறியியல் உபகரணங்களை பெற உழவன் செயலி வாயிலாக முன்பதிவு செய்துக்கொள்ளலாம் என ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் கூறியுள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டம் கூத்துக்குடி கிராமத்தில்** மலை தேனீக்கள் கொட்டியதில் ஒருவர் உயிரிழந்தார்.

10 பேர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே அரியவகை** உயிரினமான எறும்புதின்னியை வேட்டையாடிய ஐந்துபேரை வனத்துறையினர் கைது செய்துள்ளனர்.

இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வனத்துறை எச்சரித்துள்ளது.

**பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி** திருக்கோவில் ரோப்கார் சேவை பராமரிப்பு பணிகள் காரணமாக நாளை நிறுத்தப்படும் என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

**************

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருச்சி, அரியலூர் பெரம்பலூர் புதுக்கோட்டை தஞ்சை திருவாரூர் நாகை உள்ளிட்ட 21 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் வரும் 22ஆம் தேதிவரை மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*************

**பேட்மிண்டன்**

ஷென்சனில் நடைபெறும் சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சிந்து --- தாய்லாந்தின் **Chochuwong-**ஐ 21-15 21-15 என்ற நேர் செட்களில் தோற்கடித்தார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை முன்னேறியுள்ளது.

*************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**